DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.67/2020

Prosecution witness – PW 4

| | | |
|---|---|---|
| Name | : திரு. ரெத்தினவேல் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present. A3 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)
07.03.2026 at 12.45 P.M.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது வாலிநோக்கம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.பசுபதி மற்றும் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சண்முகவேல் ஆகியோர்கள் கடந்த 2016ம் ஆண்டு வாலிநோக்கம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வந்தார்கள். அவர் தற்போது பணிமாறுதல் சென்றுவிட்டார். அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். எனவே அவர் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. கடந்த 20.03.2016ம் தேதி 14.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சண்முகவேல் என்பவர் வாலிநாக்கம் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது சரவண சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.27/2016 பிரிவுகள் 447, 421, 294(b), 506(ii) இ.த.ச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வாதியின் புகார் மனு அ.சா.ஆ. 2 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

4. அதன் பின்பு இவ்வழக்கினை சார்பு ஆய்வாளர் திரு.பசுபதி அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.03.2016ம் தேதி 16.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஜாகிர்உசேன் மற்றும் ரியாசுதீன் ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. சம்பவ சாட்சிகளான சரவணசுரேஷ், முகமது இக்பால், பானுமதி, மகேஸ்வரி, தமிழ்ச்செல்வி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. இவ்வழக்கின் எதிரிகளான அன்வர் என்ற முகம்மது அன்வர் சதாம் மற்றும் சதாம் உசேன் ஆகியோர்களை 20.03.2016ம் தேதியன்று 16.30 மணியளவில் வாலிநோக்கம் பேருந்து நிலையத்தில் காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 3வது எதிரி செய்யதுவை 26.04.2016ம் தேதி 13.00 மணியளவில் கீழக்கிடாரம் விலக்கு நிழற்குடையில் வைத்து 13.30 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 4வது எதிரியான சேகுபரீது என்பவர் மாண்பமை இராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையம்பெற்று விட்டபடியால் கைது செய்யப்படவில்லை.

7. கடந்த 31.05.2023ந் தேதி எதிரிகள் இர்பான்ஹீதா, சம்சுல்ஹீதா, பாத்திமா ஆகியோர்களை சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் நிலைத்தில் கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்துள்ளார்.

8. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சண்முகவேல் என்பவரை விசாரணை செய்து எதிரிகள் அன்வர் என்ற முகம்மது அன்வர் சதாம், சதாம் உசேன், சேகுபரீது ஆகியோர்கள் மீது இ.த.ச பிரிவுகள் 447, 421, 294(b) ன் கீழும், 3வது எதிரி செய்யது மீது இ.த.ச பிரிவுகள் 447, 421, 294(b), 506(ii) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை

என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 18:31:50 +0530